பக்கங்கள்: எட்டு

Registred as a Newspapers

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணையகம்

உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 25 திங்கட்கிழமை (07-04-1997) UTHAYAN A Lively Naonatil Yamil Daily கதிர்: 131

புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கமுன் ஐ.தே.கவுடன் அரசு பேச்சு நடத்தும்!

மே மாதத்துக்கு முன் முக்கிய பிரச்சினைகளில் உடன்பாடு கண்டு விடலாம் என நம்பிக்கை

கொழும்பு, ஏப்பிரல் 7

விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு முன் ஐ.தே.கவுடன் பேச்சு நடத்தி முக்கிய பிரச்சினைகள் சிலவற்றுக்குத் தீர்வு காண அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதிகாரப்பரவலாக்கலுக்குத் தேவையான அரசமைப்புத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு ஐ.தே.கவுடன் உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு இத்தகைய பேச்சுவார்த்தை உதவும் என்று சிரேஷ்ட அரச வட்டாரங்களை ஆதாரம் காட்டிக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வில் ஒன்றிணைந்து செயற்படுவது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் இணக்கத்துக்கு வந்துள்ளதால் ஐ.தே.க. பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்கும் என்றும் —

மே மாதத்துக்கு முன் அரசமைப்புச் சீர் திருத்தம் தொடர்பான முக்கிய பிரச்சினைகளில் ஐ.தே.க.வுடன் இணக்கம் கண்டுவிடலாம் என்றும் அரசாங்க தரப்பு நம்புகிறது.

விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சை ஆரம்பிப்பதில்லை என்பதில் இரு கட்சிகளும் இணங்கி உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பதானால் கணிசமான அளவு ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற நிபந்தனையை அரசு தளர்த்தலாம் என்றும் சொல்லப்படுகிறது.

''பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனையாக கணிசமான அளவு ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்பதே இன்றுள்ள நிலையாகும். இந்த நிபந்தனை எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்று கூறமுடியாது'' என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ''சண்டே லீடர்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தை என்பது தற்போது திரவநிலையிலேயே உள்ளது. இப்போது எந்தவித இறுதி முடிவையும் எடுக்கமுடியாது என்றும் அவர் கூறினார். (இ-3-150)

முச்சந்தி முரளி

அப்ப, வெளிநாடுகளில் செய்தபிரசாரத்துக்குப் பரிசு போல...!

வலிகாமம் பகுதியில் தேடுதல்

வலிகாமம் பகுதியில் நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை தேடுதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

குறிப்பிட்ட காலவரையறைக்குள் பேச்சை முடிவுக்கு கொண்டுவரலாம்

பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் இலங்கைக்கு உறுதி

கொழும்பு, ஏப். 7

''குறிப்பிட்ட காலவரையறைக்குள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை முடிக்கலாம் என்பதை எம்மால் உத்தரவாதப்படுத்த முடியும்.''

அரசாங்கத்துக்கும், ஐ.தே. கவுக்கும் இடையில் இனப்பிரச்சினை தொடர்பாக உடன்பாடு ஏற்பட்ட சமயம், இந்த உறுதி மொழியை பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ், கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் ஹத்தம் ஆகியோர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் தெரிவித்தனர்.

அதே சமயம் ஆயுத ஒப்படைப்பு இன்றியும் பேச்சுக்கள் தொடங்கலாம் என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-3-150)

தேவைக்கு அதிகமான ஷெல்கள் கடற்படையினருக்கு இறக்குமதி

ஆனால் 5வருடத்துக்குமுன்பாவித்துமுடிக்கவேண்டுமாம்

கொழும்பு, ஏப். 7

இலங்கைக் கடற்படையினருக்கு என்று கடந்த ஜனவரி நடுப்பகுதியில் கொழும்புத் துறைமுகத்துக்கு கப்பலில் வந்து சேர்ந்த 700 மெற்றிக் தொன் ஷெல்களால் கடற்படையினருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

350 கோடி ரூபா பெறுமதியில் இறக்குமதி செய்யப்பட்ட இந்த ஷெல்கள் கடற்படையினருக்கு 30 ஆண்டுகளுக்கு போதுமானவை ஆகும்.

ஆனால் இந்த ஷெல்களின் பாவனை காலம் 5 வருடத்துக்கு மட்டுமே என்றுதெரிவிக்கப்படுகிறது

(8ஆம் பக்கம் பார்க்க)

மேற்கு நாடு ஒன்றிலிருந்து புலிகள் ஹெலிகளை வாங்க முயற்சிக்கலாம்

'விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன் விமானப்படை அணி ஒன்றை நிறுவியுள்ளார். மேற்கு நாடு ஒன்று புலிகளுக்கு ஹெலிகளை விற்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புச் செய்தியாளர் றோஸ் டெனிஸ் 'சண்டே லீடர்' பத்திரிகையில் எழுதியுள்ள கண்ணோட்டம் ஒன்றில் இப்படித் தெரிவித்துள்ளார்.

அரச படைகளை எதிர்த்துப் போராட தாக்குதல் ஹெலிகளை புலிகள் வாங்கலாம் 'பெல்' ரக ஹெலிகளை வாங்க பேச்சுக்கள் நடப்பதாகவும் தெரியவந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீமாவோவுக்குப் பின்

பிரதமராகும் வாய்ப்பு கதிர்காமருக்கு?

கொழும்பு, ஏப். 7

அடுத்த பிரதமர் ஆகும் வாய்ப்பு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு உள்ளதாகக் கொழும்பில் இருந்து வெளிவரும் ''சண்டே லீடர்'' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணப்பட்டிருந்தால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

தினமும் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 7

காங்கேசன்துறையில் இருந்து இன்று முதல் தினமும் பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்து அனுமதிபெற்ற பட்டியல்களில் உள்ளோர் காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வந்து தமது பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் —

அனுமதி பெற்றோர் அனுமதி கிடைத்து 14 நாள்களுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலையான தமிழ்இளைஞர்கள் நேற்று கப்பலில் யாழ். வந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 7

வெலிக்கடை மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 24 தமிழ் இளைஞர்கள் அநுராதபுரம் நீதிமன்றத்தில் கடந்த 4 ஆம் திகதி ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் 13 இளைஞர்களை ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு பொறுப்பேற்றது இவர்களில் 4 பேர் தாண்டிக்குளம் ஊடாக வன்னிக்குச் சென்றுள்ளனர்.

ஏனையோர் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவர்களில் 5 இளைஞர்கள் நேற்றே அவர்களது பெற்றோரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஏனைய இளைஞர்கள் 310, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தமது அலுவலகத்தில் தங்கியுள்ளதாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் ஸ்ரீ உமாச்சந்திரனின்
பாசமிகு தந்தை

சி. ஸ்ரீகரன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

95/96 கல்வியாண்டு
கலைப்பிரிவு மாணவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம்)

(46221)

மரண அறிவித்தல்கள்

திருமதி பவளம் சிவசுப்பிரமணியம்

(அனித்தா பாடசாலை அதிபர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூட்டுறவுச் சங்க உடைத்தயாரிப்பு நிலையத்தின் முன்னாள் மேற்பார்வையாளர்)

யாழ். வண்ணார்பண்ணை பூனாறிமரத்தடியைச் சேர்ந்த திருமதி பவளம் சிவசுப்பிரமணியம் அவர்கள் 02-04-97 அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கி. சிவசுப்பிரமணியம் (ஆசிரிய ஆலோசகர்) அவர்களின் அன்பு மனைவியும், கிரிசாந்தி (ரஷ்யா), அனித்தா (யாழ். பல்கலைக்கழகம், விஞ்ஞானபீடம், 2 ஆம் ஆண்டு), கோகுலன், (கோபி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகுதாயாரும், திருமதி த. பரமேஸ்வரி (நோர்வே), து. விஜயரெட்ணம், திருமதி த. தையல் நாயகி, திருமதி இ. சறோஜினி, து. மகாலிங்கம் (Mini), து. பாலறஞ்சித் (U. K.), து. றஞ்சித்குமார் (ஜப்பான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (07-04-97) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

சி. கோகுலன் (மகன்)
(கோபி)

அனித்தா பாடசாலை,
பூனாறிமரத்தடி, கொக்குவில். (46146)

ஜெகநாதன் பிரதீபன்

சங்கரத்தை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெகநாதன் பிரதீபன் (Lecturer, Umtata Universitiy) 31-03-97 அன்று தென்னாபிரிக்காவில் அகால மரணமடைந்தார்.

இவர் திரு. கார்த்திகேசு ஜெகநாதன் (ஓய்வு பெற்ற அதிபர், இரத்மலானை இந்துக்கல்லூரி) திருமதி சகுந்தலா ஜெகநாதன் (ஓய்வு பெற்ற உப அதிபர், இரத்மலானை இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் புதல்வரும், மைதிலி (Teacher Transkei), ஜனார்த்தனா (Engineer - Australia), Dr. சன்ஜயன் (Cape - town) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியநாதன் (Engineer - Transkei) மீரா (Lecturer-Australia) சிவாஜினி (Quantity surveyor - Cape town) ஆகியோரின் மைத்துனரும் கஜானன், மயூரன், ஜனனி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-04-97 அன்று தென்னாபிரிக்காவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
திருமதி V. Rajasingam.
(Colombo)

(46212)

புங்குடுதீவு
சின்னத்தம்பி ஸ்ரீகரன் (ஸ்ரீ)

(புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்)
(Store Keeper)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஜேர்மனியில் வசித்தவருமான சின்னத்தம்பி ஸ்ரீகரன் வெள்ளிக்கிழமை (04 - 04 - 1997) ஜேர்மனியில் காலமானார்.

இவர் சின்னத்தம்பி தங்கம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும், நயினாதீவு கனகசபை தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெகதாம்பாளின் (புனிதம்) அன்புக் கணவரும், செந்தில்குமரன் (பிரான்ஸ்), யாழ். பல்கலைக்கழக மாணவர்களான பத்மலோசனி 2 ஆம் வருடம், விஞ்ஞான பீடம்), மதிவதனி (2 ஆம் வருடம், கலைப்பீடம்), உமாச்சந்திரன் (1 ஆம் வருடம், கலைப்பீடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சனாவின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும், சிவபாக்கியம், சின்னம்மா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லம்மா, சபாரெத்தினம் (பிரான்ஸ்), மருதப்பு (இளைப்பாறிய ஆசிரியர், கனடா), பரமேஸ்வரி, திருஞானம் (முன்னாள் இ. போ. ச. பரிசோதகர்), திருச்செல்வம் (இளைப்பாறிய அதிபர்) மற்றும் காலஞ்சென்ற திலகவதி, தில்லையம்பலம் (இளைப்பாறிய தபாலக உத்தியோகத்தர் — புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை (இன்று) ஜேர்மனியில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜெகதாம்பாள் (புனிதம்)
(மனைவி)
பிள்ளைகள்.

மணியகாரன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (46220)

மகாசங்கத்துக்கு ஐ. தே. க. விளக்கும்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும், ஐ. தே. க. வுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு தொடர்பாக மகாசங்கத்தினருடன் பேச்சு நடத்தும் பொறுப்பை ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் கருணசேன கொடித்துவக்கிடம் ஐ தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒப்படைத்துள்ளார்.

கருணசேனகொடித்துவக்கு விரைவில் மகாசங்கத்தினரைச் சந்தித்து ஐ. தே. கவின் நிலைப்பாடு குறித்து விளக்கவிருக்கிறார்.

ரணிலின் வேண்டுகோளின்படி கருணசேன கொடித்துவக்கு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனவுடன் பேச்சு நடத்தினார்.

சந்திரிகா—ரணில் உடன்பாடு குறித்து தினேஷ் குணவர்த்தன ஆர்வங் காட்டவில்லை என்றும்—

இருகட்சிகளும் ஒரேவித மானவை என்று அவர் தெரிவித்ததாகவும்— செய்திகள் வெளியாகியுள்ளன. (இ-3-150)

இரத்தம் வழங்க கோரிக்கை

வன்னிப் பிரதேசத்தில் இருந்து திரும்பி வந்த அனேகர் இரத்தச் சோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு இரத்தம் தேவைப்படுவதாகவும்—

எனவே பொதுமக்கள் இயன்றளவு இரத்ததானம் செய்வதற்கு யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறும்— பணிப் பாளரால் கோரப்பட்டுள்ளது. (இ)

சுகாதார வார நிகழ்வுகள்

பருத்தித்துறைப் பிரதேச செயலக புலோலி மத்தி, புலோலி மேற்கு கிராமசேவகர் பிரிவுகளுக்கான சுகாதார வார நிகழ்வுகள் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கிராமசேவையாளர் க. சண்முகநாதன் தலைமையில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி கலந்து கொள்வார். (இ-118)

யூனிவேர்சல்

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

96, 97 A/L
PAPER CLASS
PHYSICS
★வெப்பவியல்★
திரு. ஜெயசீலன் B. sc
(Dip -In- Ed.)
ஆரம்பம்:- 08-04-97
செவ்வாய்.
(46229)

கணக்கியல்

திரு. பாலவாசன்
97 - கம்பனி முடிவுக் க/கு
98 - வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
99 - சில்லறைக் காசேடு
SHAMROCK
யாழ்ப்பாணம்.
(46230)

இரு தரப்புக்குமே உடன்பாடு பிரச்சினை

கொழும்பு, ஏப். 7

அரசாங்கத்துக்கும், ஐ. தே. கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு இருதரப்புக்குமே நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் அரசியல் கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏதாவது இராணுவ நடவடிக்கை அல்லது தாக்குதல் நடவடிக்கை ஒன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டால் அது குறித்து அரசாங்கம் ஐ. தே. கவுக்கு தெரிவிக்க வேண்டும்.

அதேநேரம் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை அரசுடன் சேர்ந்து ஆதரிக்க வேண்டிய நிலை ஐ. தே. கவுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

வாழ்த்துகின்றோம்

இன்று தொண்ணூறாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் முன்னாள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளரும், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும், **யாழ். வாணியற் கழக ஸ்தாபகரும், தற்போதைய தலைவருமான** கோண்டாவில்

திரு. பிரம்மஸ்ரீ ந. கந்தசாமி ஐயர்

அவர்கள் நீடூழி வாழ வாழ்த்தும்,

சி. முகுந்தன்
(இறுதியாண்டு, யாழ். மருத்துவபீடம்)
சி. இரத்தினவடிவேல்
(அகில இலங்கைச் சோதிட ஆய்வு மன்றச் செயலாளர்)
(46225)

கண்ணீர் அஞ்சலி

திருமதி
இராஜேஸ்வரி சண்முகநாதன்
(பதில் அதிபர், புற்றளை மகா வித்தியாலயம்)

தென்புலோலி, புற்றளை மகா வித்தியாலயத்தின் ஆசிரியையாகவும், பதில் அதிபராகவும் அதி சிறப்பாகக் கடமையாற்றி சிகிச்சை பெற தமிழகம் சென்று திடீரென இறைபதம் எய்திய

திருமதி இராஜேஸ்வரி சண்முகநாதனுக்கு

எங்கள் கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கத்தினர்.
புற்றளை மகா வித்தியாலயம்.
புலோலி. (சி/452)

கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீ உமாச்சந்திரன் (1ம் வருடம், கலைப் பீடம்)
ஸ்ரீ. பத்மலோசனி (2ம் வருடம், விஞ்ஞான பீடம்)
ஸ்ரீ மதிவதனி (2ம் வருடம், கலைப் பீடம்)
அவர்களின் தந்தை

சி. ஸ்ரீகரன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1 ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக் கழகம்.
(கொக்குவில் இந்து பழைய மாணவர்கள்)

(46222)

மரண அறிவித்தல்

சிவசாமிக்குருக்கள் செந்திநாதசர்மா

சிவசாமிக்குருக்கள் செந்திநாதசர்மா 03-04-97) அன்று காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வியாபாரிமூலை சிவசாமிக்குருக்கள், வீணாகான விபூஷனி அம்மாள் தம்பதிகளின் சிரேஷ்ட குமரரும், சுழிபுரம் குமாரசாமிக்குருக்கள் பொன்னம்மாள் தம்பதிகளின் மருமகனும், திருமதி இராஜேந்திரக்குருக்கள், வாசுதேவக்குருக்கள் ஆகியோரின் சகோதரரும், அம்பிகாதேவியின் அன்புக் கணவரும், கிருபாகரன், கார்த்தியாயினி, மைதிலி, கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சேகரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04-04-97 அன்று சுழிபுரத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

12-04-97 சனிக்கிழமை — தசாகம், 18-04-97 வெள்ளிக்கிழமை — கிருகயக்ஞம் நடைபெறும்.

தகவல்:
மனைவி

'வள்ளியம்மன் கோயில்'
சுழிபுரம். (46228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் கிளைநூலகம்

அரசியல் களமாக மாறியுள்ள டில்லி அப்பலோ மருத்துவமனை

வி. பி. சிங்

புதுடில்லி, ஏப். 7

இந்தியாவில் உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடி நிலையை அடுத்து புதுடில்லியில் உள்ள அப்பலோ மருத்துவ மனை அதி முக்கிய அரசியல் களமாகமாறி யிருக்கிறது,

கடந்த சில நாள்களாக அங்கு மருத்துவப் பணியை விஞ்சி அரசியல் பணிகள் தீவிர மடைந்துள்ளன.

முன்னாள்பிரதமரும் ஜனதா தள் தலைவருமான விஸ்வநாத் பிரதாப் சிங் இந்த மருத்துவ மனையிலேயே தங்கியுள்ளார்.

நோய்ப்படுக்கையில் இருந்தவாறு அவர் தற்போதைய நெருக்கடி நிலையைச் சமாளிக்க ஆளும் ஐக்கிய முன்னணிக்கு ஆலோசனைகளை வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

பிரதமர் தேவகௌடா, தேசிய காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் ஆகியோர் உட்படப் பல அரசியல் தலைவர்கள் அந்த மருத்துவமனைக்குச் சென்று வி.பி சிங்குடன் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இணக்க நிலை ஒன்றை உருவாக்க முயற்சித்து வரும் முன்னாள் பிரதமர் வி.பி. சிங் புற்றுநோயால் பீடிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஹூட்டு அகதிகளை வெளியேற்ற ஸயர் கிளர்ச்சியாளர் சம்மதம்

கிசங்கானி, ஏப். 7

ஸயர் நாட்டு அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பிறிட்டோரியாவில் நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ள வேளையில் —

தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிக்கிபட்டினியால் மடிந்து வரும் ஹூட்டு இன அகதிகள் ஒரு லட்சம் பேரையும் கிசங்கானியில் இருந்து விமானம் மூலம் வெளியேற்ற கிளர்ச்சியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஹூட்டு இன அகதிகளை வெளியேற்றும் பணி இன்னும் ஒருவார காலத்துக்குள் ஆரம்பிக்கப்பட்டு விடும் என்று அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர். அகதிகளை வெளியேற்ற உதவுமாறு விடுக்கப்பட்டு வந்த பன்னாட்டு கோரிக்கைகளை அடுத்தே கிளர்ச்சியாளர்கள் இதற்கு இணங்கியுள்ளனர்.

வைரங்களை கொள்ளையிட்ட பின் அரச படைகள் தப்பி ஓட்டம்!

ஸயர் நாட்டின் நான்காவது பெரிய நகரமான முபுஜிமாஜியை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர்,

வைரச்சுரங்களைக் கொண்ட முபுஜிமாஜி நகரை விட்டு அரச படைகள் தப்பி ஓடிவருவதாக அங்கிருந்து

உலக அரங்கில்

முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நகரை மிக அண்மித்து வந்து சுற்றிவளைத்துள்ள கிளர்ச்சிப்படைகள் எவ்வேளையும் நகருக்குள் பிரவேசிக்கும் நிலையில் நிலைகொண்டிருந்த சமயம்—

அரசுக்குச் சொந்தமான அகழ்வு நிறுவனங்களின் வாகனங்களைக் கைப்பற்றிய படைகள் வைர வியாபார நிலையங்களைக் கொள்ளையடித்த பின்னர் அவற்றில் தப்பிச் சென்றதாக முபுஜிமாஜி நகரில் உள்ள வெளி நாட்டவர்கள் தெரிவித்தனர். (ஐ)

சமாதானத்தை உருவாக்ககோரி இஸ்ரேல் தலைநகரில் பேரணி

அமெரிக்க அதிபர் கூட்டும் மாநாடு இன்று ஆரம்பம்

மேற்காசிய சமாதான முயற்சி தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு நேற்று அமெரிக்காவுக்குப் பயணமாக ஆயத்தமான வேளை —

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரி ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் தலைநகர் ரெல் அவிவில் சமாதானப் பேரணி ஒன்றை நடத்தினர்.

அரபு கிழக்கு ஜெருஸலேமில் யூதக் குடியிருப்புகளை அமைக்க இஸ்ரேல் ஆரம்பித்ததை அடுத்து தடைபட்டுப் போயுள்ள மேற்காசிய சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இன்றுவாஷிங்டனில் உயர் மட்ட மாநாடு ஒன்றைக் கூட்டுகிறார்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அவர் விடுத்த அழைப்பை ஏற்று இஸ்ரேலியப் பிரதமர் அமெரிக்காவுக்கு நேற்று பயணமானார்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு இஸ்ரேல் பிரதமரைச் சந்தித்துப் பேச பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் நிபந்தனைகளை விதித்துள்ளார்.

முதலில் இஸ்ரேல் தனது யூதக் குடியிருப்புத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்று அவர் வற்புறுத்தி வருகிறார்.

ஆனால் யூதக்குடியிருப்பு கட்டுமானப் பணி தொடரும் என்று இஸ்ரேலியப் பிரதமர் அறை கூவல் விடுத்துள்ளார். (ஐ)

கத்தோலிக்க தலைமைப் பீடம் மறுப்பு

இரண்டாயிரமாம் ஆண்டின் வருகையைப் பிரமாண்டமாகவும் அர்த்தமுள்ளதாகவும் சிறப்பிக்க கத்தோலிக்கத் திருச்சபை தற்போதே திட்டமிட்டு செயலாற்றி வருகிறது.

இது தொடர்பாக கத்தோலிக்க திருச்சபைத் தலைமைப் பீடதுக்கும் கொகோகோலா நிறுவனதுக்குமிடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் பட்டுள்ளதாக சில பத்திரிகைகளின் வெளியான தகவலை வத்திதான் தலைமைப்பீடம் முற்றாக நிராகரித்துள்ளது.

இருவர் கைது

இஸ்லாமாபாத், ஏப். 5

பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத் கடந்த மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த போது அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்த இருவரை கடந்த வியாழனன்று பாகிஸ்தான் காவல் துறையினர் கைது செய்தனர்.

யாசீர் அரபாத் பங்களாதேஷ் சுதந்திரதின விழாவில் கலந்துவிட்டு நாடு திரும்ப டாக்கா விமான நிலையம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது சிலரால் அவரது வாகனத்தின் மீது தேங்காய்கள் வீசப்பட்டமை. தெரிந்ததே.

அரபு உலகில் மிகவும் மதிக்கப்படும் யாசீர் அரபாத்துக்கு முஸ்லிம் நாடுகளான பாகிஸ்தான் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான அனுபவங்கள் கிடைத்துள்ளன. (ஐ-10)

பிரிட்டனில் வெடிகுண்டு அச்சுறுத்தலால் குதிரைப் பந்தயம் ஒத்திவைப்பு

லண்டன், ஏப். 7

உலகின் மிகப்பெரிய குதிரைப் பந்தயப் போட்டி பிரிட்டனில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது

பந்தயம் நடைபெறவிருந்த மைதானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை அடுத்தே போட்டி ஒத்திவைக்கப்பட்டது.

போட்டி ஆரம்பமாகுவதற்கு சுமார் ஒரு மணி நேரம் முன்பதாக மைதானத்தில் இருந்து 60 ஆயிரம் பார்வையாளர்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த வெடிகுண்டு அச்சுறுத்தல் யாரால் விடுக்கப்பட்டது என்பது தெரியவரவில்லை. ஆனால் இச்சம்பவத்துக்கு ஐ. ஆர். ஏ. அமைப்பே பொறுப்பு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று பிரதமர் ஜோன் மேஜர் தெரிவித்தார். (ஐ)

ஓஸோன் படலத்தில் மேலும் ஓட்டைகள்!

பூமியை ஆபத்து நெருங்குகிறது!!

நியூயோர்க், ஏப். 7

பூமியைப் பாதுகாக்கும் ஓஸோன் படலத்தில் வடதுருவப் பகுதியில் ஓட்டைகள் பெரிதாகி வருவதாக ஐ. நா. அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு மார்ச்சில் தென்பட்டதை விட இவ்வாண்டு மார்ச்சில் ஆட்டிக் பகுதிக்கு மேல் ஓஸோன் படலத்தில் 15 முதல் 25 சதவீதம் பாதிப்பு பெரிதாகியிருப்பதாக உலக கால நிலையியல் அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக நாடுகள் தாம் பயன்படுத்தும் எரிபொருள்களின் அளவைக் குறைக்காது விடின் எதிர்வரும் இரண்டாயிரத்து ஒன்று முதல் இரண்டாயிரத்து 5 வரையான ஆண்டு காலப்பகுதியில் ஓஸோன் வாயு மண்டல ஓட்டைகள் இன்னும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கை விடுவிக்கப்பட்டிருக்கிறது.

சூரியனில் இருந்து வரும் அல்ற்றா வயலட் கதிர்கள் நேரடியாகப் பூமியைத் தாக்காத படி பாதுகாத்து வருவது இந்த நீல நிற ஓஸோன் மண்டலமாகும். (ஐ)

உலர் உணவு நிவாரணத்தை நிறுத்தக் கூடாதுஎன வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 7

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்கப்படும் ஐயாயிரம் ரூபாவைப் பெறுபவர்களுக்கு தொடர்ந்தும் உலர் உணவு நிவாரணம் வழங்கப் படவேண்டும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் இடம்பெற்ற மீளக்குடியமர்வு புனர்வாழ்வு ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் முன்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

மீளக்குடியமர்வு கொடுப்பனவாக ஐயாயிரம் ரூபாவைப்பெறுபவர்களுக்கு அவர்களின் உலர் உணவு நிவாரண முத்திரைகள் பின்னர் நிறுத்தப்படலாம் என்று தகவல் வெளியாகியிருப்பதை அடுத்தே இத்தீர்மானம் சபையில் வலியுறுத்தப்பட்டது. (ஐ-15)

செயல் திட்ட ஆய்வுப் பட்டறை

கொழும்பு,ஏப்.7

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் நடத்தப்படும் புனரமைப்புக் கருத்திட்டம் தொடர்பான ஆய்வுப் பட்டறை இன்று திங்கட் கிழமையும் நாளை செவ்வாக் கிழமையும் காலை 9.30 மணிமுதல் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் சந்தைப்படுத்தும் நுகர்ச்சியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

சைவப் புலவர் பரீட்சை

கொழும்புத்துறை, ஏப். 7

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை மூன்று தினங்கள் நடைபெற விருப்பதாக சபையின் செயலாளர் தெரிவித்தார். பரீட்சை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (ஐ-30)

கிராமிய சுகாதார உதவியாளர்கள் மார்ச் மாதத்துடன் வேலை இழப்பு!

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் சுகாதார சேவையில் ஈடுபட்ட கிராமிய சுகாதார உதவியாளர்களும் சுகாதார தரிசிப்பாளர்களும் கடந்த மார்ச் 31ஆம் திகதியுடன் தமது வேலையை இழந்துள்ளனர்.

இவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் வழங்கப்பட்டுவந்த கொடுப்பனவு மார்ச் மாதத்துடன் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டதையடுத்து இவர்கள் வேலையை இழந்துள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் இவர்கள் சுகாதார வேலையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

கிராமிய சுகாதார உதவியாளர்களையும், சுகாதார தரிசிப்பாளர்களையும் சுகாதார சேவைகள் மாகாணப்பணிப்பாளர் பணிமனையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும்—

அமையத் தொழிலாளர்களாகக் கடமையாற்றவிரும்பிய கிராமிய சுகாதார உதவியாளர்கள் மற்றும் சுகாதார தரிசிப்பாளர்களின் விவரங்கள் திருகோணமலை சுகாதார பணிப்பாளருக்கு அனுப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இந்த கிராமிய சுகாதார உதவியாளர்கள் வெற்றிடமாக இருந்த குடும்ப நல சேவையாளர்களின் பிரிவுகளிலும், சுகாதார தரிசிப்பாளர்கள் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

குருநகரின் சில பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதி

குருநகர் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த சிலபகுதிகளில் பொது மக்கள் மீண்டும் மீளக்குடியமர அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

வன்னியில் இருந்து வள்ளங்கள் மூலம் குருநகர் வந்து சேரும் மக்களில் பலர் தமது சொந்த வீடுகளில் குடியேற முடியாத நிலை இருந்து வந்தது.

இது தொடர்பாக இராணுவத்தினருடன் தமது அமைப்பு பேச்சுக்கள் நடத்தியதாகவும் —

அதையடுத்து குருநகரில் சில பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் — ஈ. பி. டி.பி அமைப்பின் யாழ். அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிகாமம் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, ஏப். 7

தென்மராட்சி கல்விக்கோட்ட கொடிகாமம் வலயத்தைச் சேர்ந்த 16 பாடசாலைகளுக்கு அலுவலக உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் மனையியல் பாட உபகரணங்கள், சங்கீதபாட உபகரணங்கள் ஆகியவை கடந்த வெள்ளியன்று கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் 522 ஆவது படையணியின் இணைப்பதிகாரியினால் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

சாவகச்சேரி வலயத்தைச் சேர்ந்த 23 பாடசாலைகளுக்கும் மேற்படி பாடசாலை உபகரணங்கள் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் வைத்து அதிபர்களிடம் கையளிக்கப்பட்டது தெரிந்ததே.

இந் நிகழ்வுகளில் தென்மராட்சி கோட்ட கல்வி அலுவலர் இ. கணேசன், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. சத்தியநாதன், எம். கைலைநாதன் உட்பட பல அதிபர்களும் கலந்து கொண்டனர்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்காக தென்னிலங்கை மக்கள் இவற்றை இங்கு அனுப்பி வைத்துள்ளனர். (ஐ-117)

கடற்றொழில் செய்வோருக்கு கடன் வழங்க அனுமதி

கொழும்புத்துறை, ஏப். 7

யாழ்ப்பாணம் கிழக்கு கடற்றொழில் பரிசோதகர் பிரிவைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களுக்கு மீனவர் கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி பாசையூர் கிராம கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 8 அங்கத்தவர்களுக்கும் —

கொழும்புத்துறை கிராம கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 5 பேருக்கும் —

மணியம் தோட்ட கிராம கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் இருவருக்கும் கடன் அடிப்படையில் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வள்ளங்களும் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளை கடற்றொழில் பரிசோதகர் கே. கணபதிப் பிள்ளை மேற்கொண்டு வருகிறார். (ஐ-30)

தீவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலையம்

கடந்த 140 வருடங்களுக்குமேல் தீவகத்தில் சேவையாற்றிய வைத்தியசாலை மீண்டும் 06 - 04 - 97 ஞாயிறு தொடக்கம் வேலணைதுறையூர் சர்வோதய கட்டடத்தில் மீண்டும் சேவையாற்ற உள்ளது. வெகு விரைவில் ஊர்காவற்துறையிலும் சேவையை தொடர உள்ளது.

நிர்வாகம்
சிங்கராஜா திருக்குமாரன்

(46214)

UNIVERSITY OF JAFFNA, SRILANKA TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from suitable contractors to carry out.

Termite proofing the Administration Building

Tender forms may be obtained from Works Engineer (civil), University of Jaffna until 23-4-1997 on cash payment of the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit — Rs. 3,000.00
2. Non - refundable deposit - Rs. 300.00

Tenderers should produce documents to show proof to their capability in termite proofing/pest control.

Perfected tenders to be sent to reach The Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's Office, University of Jaffna on or before 08-05-1997 at 10.00 a. m.

Tender forms may be seen by the tenderers at the Maintenance Branch of this University during office hours, if necessary.

Dr. K. Kunarasa
Registrar

University of Jaffna,
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/438)

நினைவஞ்சலி

19 ஆம் ஆண்டு

சின்னத்துரை செல்லத்துரை

தோற்றம்: 28 - 12 - 1922
மறைவு: 29 - 06 - 1978

1 ஆம் ஆண்டு

செல்லத்துரை செல்லம்மா

தோற்றம்: 18 - 04 - 1928
மறைவு: 18 - 04 - 1996

திதி: 08 - 04 - 1997

பாசத்தைப் பொழிந்து நேசமுடன் எமை வளர்த்த எம் நெஞ்சங்களே! என்றுமே நீங்காத நினைவுகளுடன் எமை விட்டுப் பிரிந்த எம் அன்புத் தெய்வங்களே! உங்கள் ஆத்மா அமைதியுற அனுதினமும் இறைவன் பாதங்களில் கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்புத் தெய்வங்களின் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

630, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(46216)

செய்திச் சாரம்

வழுக்கியாறு பாலம் சேதமான நிலையில்

யாழ்ப்பாணம், ஏப். 7

நவாலி வழுக்கியாறு பாலம் நீண்ட காலமாக சேதடைந்து திருத்தப்படாத நிலையில் உள்ளது. இதனால் அதன் வழியாகப் பிரயாணம் செய்வது ஆபத்தாகி உள்ளது.

அப்பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

''முன்னேறிப்பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் போதே இப்பாலம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

பாலஸ்தாபனம்

வடமராட்சி, ஏப். 7

கரவெட்டி வடக்கு அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் கடந்த பங்குனித் திங்களன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

ஆலய திருத்த வேலைகளும் வர்ண வேலைப்பாடுகளும் ஆரம்பமாகியுள்ளன எதிர்வரும் வைகாசி மாதம் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். (ஐ-173)

முதலாம் தவணை விடுமுறை

தென்மராட்சி, ஏப்.7

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

முதலாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் பத்தாம் திகதி பாடசாலைகள் மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

பாலம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7

நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்குச் செல்லும் பாதையில் உள்ள பாலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

கடந்த 14 வருடங்களாக முற்றாக சேதமடைந்து பாவிக்கமுடியாத நிலையில் இப்பாலம் இருந்து வந்தது.

அப்பகுதி மக்கள் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு எடுத்த தீவிர முயற்சியின் பிரகாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் பாலத்தைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (ஐ-15)

சண்டிலிப்பாய் இந்து தரமுயர்வு

யாழ்ப்பாணம், ஏப். 7

இதுவரை நாளும் தரம் இரண்டு பாடசாலையாக இருந்த சண்டிலிப்பாய் இந்து பாடசாலை கடந்த 5 ஆம் திகதி முதல் தரம் ஒன்று 'சி' பாடசாலையாக மாகாணக்கல்வி அமைச்சினால் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. (ஐ)

நூலக கட்டடம் திருத்தப்பட்டது

கொழும்புத்துறை, ஏப். 7

நல்லூர் மூத்த விநாயகர் சன சமூக நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது. கடந்த கால யுத்த அனர்த்தங்களின் போது சேதமடைந்த இந் நூலகக் கட்டடம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-30)

சங்கரத்தையில் பாலர் பாடசாலை

நெடுந்தீவு, ஏப். 7

சங்கரத்தை சன சமூக நிலையம் அப்பகுதியில் உள்ள சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக பாலர் பாடசாலை ஒன்றை அண்மையில் ஆரம்பித்து வைத்தது. (ஐ-117)

வயலில் பாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஏப். 7

வயல் வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 4 ஆம் திகதி இடம் பெற்ற சம்பவத்தில் சாவகச்சேரி நுணாவில் மேற்கைச் சேர்ந்த ந. குணரத்தினம் (வயது 26) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். (ஐ-117)

மகப்பேற்று நிலையத்துக்கு ஜெனரேற்றர்

தென்மராட்சி, ஏப். 7

மிருசுவில் மகப்பேற்று மருத்துவ மனைக்கு ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான புதிய ஜெனரேற்றர் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

நெடுந்தீவு கோட்ட விளையாட்டுப் போட்டிகள்

நெடுந்தீவு, ஏப். 7

நெடுந்தீவு கோட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை நெடுந்தீவுக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-111)

தொடர் மாடியில் சங்கக்கிளை

குருநகர், ஏப். 7

யாழ். ப. நோ. கூ சங்கத்தின் 32 'ஏ' கிளை மீண்டும் குருநகர் தொடர்மாடியில் இயங்கத் தொடங்கி உள்ளது. (ஐ-51)

ஆஸ்பத்திரிக்கு நுளம்பு வலைகள்

யாப்பாணம், ஏப். 7

யாழ். போதனாவைத்திய சாலையின் பாவனைக்கென ''யுனிசெவ்'' நிறுவனம் 500 நுளம்பு வலைகளையும், 10 கே. வி வலுவுள்ள மின் இயந்திரமொன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கொழும்பில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுகப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட இப் பொருள்கள் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. (ஐ-15)

பாலர் பாடசாலை விரைவில் இயங்கும்

குருநகர், ஏப். 7

குருநகர் தொடர்மாடி சன சமூகநிலையத்தின் பாலர் பாடசாலை விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக நிலையத்தின் தலைவர் தெரிவித்தார். (ஐ-51)

உலக சுகாதார தினம்

யாழ்ப்பாணம், ஏப். 7

இன்று 7 ஆம் திகதி திங்கட்கிழமை உலக சுகாதார தினமாகும். இதையொட்டி நோய் தடுப்புத் சுதாதாரம் குறித்த கருத்தரங்குகள் பல வேறுபகுதிகளிலும் நடைபெறவுள்ளன. (ஐ-111)

வலி. தெற்கில் சைக்கிள் உரிம தகடுகள் விநியோகம்

வலிகாமம் தெற்கு, ஏப். 7

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்கள் மூலம் இவ்வாண்டுக்கான துவிச்சக்கர வண்டிகளுக்குரிய உரிமத் தகடுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-152)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் இணையம்

ஜேர்மன் அரசு உதவியுடன் புனரமைப்புத் திட்டங்கள்

அந்நாட்டு அதிகாரி விளக்குகிறார்

யாழ்ப்பாணம், ஏப். 7

குடாநாட்டில் பல்வேறு புனரமைப்புத் திட்டங்களை செயற்படுத்த ஜேர்மன் அரசாங்கம் முன் வந்துள்ளது. அத்திட்டங்கள் அடுத்தமாத முதற்பகுதியில் இருந்து செயற்படுத்தப்படும்.

ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபனத்தின் யாழ். திட்ட செயற்பாட்டுக்கு பொறுப்பான குழுவின் உறுப்பினரான ஸ்ரெப்பன் ஆர். வைரத் உதயனுக்கு மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் உடனடியாக 3 திட்டங்கள் செயற்படுத்தப்பட இருக்கின்றன. இத்திட்டங்களுக்காக 50 லட்சம் ஜேர்மன் மார்க்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

குடிதண்ணீர் விநியோகத்தை சீராக்க ஆயிரம் கலன் கொள்ளளவுடைய 30 கொள்கலன்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

தற்போது கரையோரப் பகுதியில் இனங்காணப்பட்டுள்ள 18 இடங்களில் நீர்தாங்கிகளை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் உள்ள கிணறு சுத்திகரிக்கப்பட்டு அங்கிருந்து பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் எடுத்து வரப்பட்டு நீர்த்தாங்கிகளில் நிரப்பப்பட்டு மக்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

இரண்டாம் கட்டமாக திருநெல்வேலி கிணற்றில் இருந்து குழாய்கள் பொருத்தப்பட்டு பிரதான வீதியில் உள்ள நீர்த்தாங்கி மூலமும்,—

கோண்டாவில் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து குழாய்கள் பொருத்தப்பட்டு குருநகரில் உள்ள நீர்தாங்கி மூலமும்—குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் கிராமப்புறங்களில் குடிதண்ணீர் விநியோகத்தைச் சீராக்கவும் திட்டங்கள் செயற்படுத்தப்படும் அவை தொடர்பாக தற்சமயம் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

குடாநாட்டில் உள்ள 20 பாடசாலைகளைபுனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர் வரும் செப்டம்பர் மாதத்துக்கு முன்னர் 6 பாடசாலைகள் புனரமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை புனரமைப்பின் கீழ் பாடசாலை கட்டடங்கள் திருத்தல், தளபாடங்கள் விநியோகித்தல், மலசல கூட வசதிகள் ஏற்படுத்தல் போன்றவை மேற் கொள்ளப்படும்.

இந்தத் திட்டங்களை விட மேலதிகமாக வீடுகளை புனரமைக்க 50 லட்சம் ஜேர்மன் மார்க்குகளை ஜேர்மன் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

சேதமடைந்த வீடுகளை மதிப்பிட்டு, அவற்றைத் திருத்தத்தேவையான பொருள்களை வழங்குவதுடன் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்குவோம்.

எமது திட்டங்கள் யாவும் அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும்.

எமது திட்டங்களுக்குத் தேவையான பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு கப்பல் வசதி பெறுவது பெரும் பிரச்சனையாக உள்ளது.

இந்தப்பிரச்சனையைத் தீர்க்க எமது திட்டங்களுக்கு தேவையான பொருள்களை எடுத்து வர தனிக்கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்ய முயற்சி எடுத்துள்ளோம்—என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-3)

வவுனியா தடுப்பு முகாமில் இருந்து போலி ஆவணங்களைக் காட்டி யுவதியை கூட்டிச்செல்ல முயற்சி

2 பெண்கள் உட்பட 6 பேர் கைது

வவுனியா, ஏப். 7

வவுனியா அகதி முகாமில் இருந்து போலி ஆவணங்களைக் காட்டி இளம் பெண் ஒருவரைத் தென் பகுதிக்குக் கூட்டிச் சென்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இரு பெண்கள் உட்பட 6 பேரை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

வவுனியாவில் முகாமுக்கு வெளியில் தங்கியிருந்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் பூந்தோட்ட முகாமில் தங்கியிருந்த இளம் பெண் ஒருவரை போலி ஆவணங்களைக் காட்டி அழைத்துச் சென்றனராம்.

தென்பகுதிக்குச் செல்வதற்காக இவர்கள் ஈரப்பெரியகுளம் தடைமுகாமுக்கு சென்ற போது, பொலிஸாருக்கு கிடைத்த ஒரு தகவலைபடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அந்த இளம் பெண் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் எனச் சந்தேகிக்கும் பொலிஸார் அனைவரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளனர்.

(ஐ-3-150)

சிலை நிந்திகளில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஞ்சத் திருவிழா இன்று திங்கட்கிழமை மாலை ஐந்து மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரியம்மன், கொழும்புத்துறை கடற்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள், கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள், கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆகிய ஆலயங்களில் பங்குனி கடைசித் திங்களை ஒட்டி இன்று பொங்கல் விசேட பூசைகள் இடம்பெறும்

★ ★ ★

கோயிலாக்கண்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இறுதி நாளான நாளை காலை 108 சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நேற்று நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

★ ★ ★

மூளாய் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி ஆலய கும்பாபிஷேக மண்டல மஞ்சன பூர்த்தி தின நவோத்தர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கான கிரியா நிகழ்வுகள் நேற்று மாலையே ஆரம்பமாகின.

அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றத்தினர் வழங்கும் பட்டி மண்டபம் இன்று பிற்பகல் 3 மணி முதல் ஆலயச் சூழலில் நடைபெறவுள்ளது.

மனித உரிமைகளை மீறுவோரை அணுகவியலா நிலை இலங்கையில்

பிணையில் விடப்பட்ட பலர் மீது வழக்கு இல்லை

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 53 ஆவது அமர்வின் போது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் ஆற்றிய உரையின் தொகுப்பு.

இந்தச் சபையின் உடனடிக் கவனத்தையும் தலையீட்டையும் கோரும் நிலைமைகளை எடுத்துரைக்க இந்தச் சந்தர்ப்பத்தை நான் எடுத்துக் கொள்கின்றேன்.

இலங்கையில் இருந்து வந்த நான் அந்நாட்டின் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவன், கைதுகள், தடுத்து வைத்தல் சித்திரவதை, சிறைவைத்தல், காணாமற் போதல் ஆகியவற்றை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

தீமையான சித்தாந்தம்

அந்நாட்டில் தற்போது தமிழர்களுக்கு எதிராக 'சமாதானத்துக்காக யுத்தம்' என்ற தீமையான சித்தாந்தத்துடன் போர் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழர்களின் மரபுவழித் தாயகமான வடக்கு – கிழக்குப்பகுதியில், கடந்த 15 வருடங்களாக நடைபெற்று வரும் இந்தச் சண்டையில் தற்போது கொலைகள் அதிகரித்து வருகின்றன. இங்கு தடுத்து வைப்பு தொடர்பாக கோட்பாடுகள் யாவும் அலட்சியம் செய்யப்படுகின்றன. ஆயுதப் போராட்டங்களின் போது பின்பற்றப்பட வேண்டிய சர்வதேசம் தழுவிய மனித நேய சட்டங்கள் மீறப்படுகின்றன.

இலங்கை அரசாங்க பாதுகாப்புப் படைகள் கைது செய்தல், சித்திரவதைகள், காணாமற் போதல் மற்றும் சட்டத்துக்கு புறம்பான கொலைகள் ஆகியவற்றின் மூலம் தமிழர்களைத் துன்புறுத்துகின்றன.

அத்துடன் இலங்கைப் படைகள், பாரா இராணுவக் குழுக்கள் மேற்குறிப்பிட்ட குற்றங்களைச் செய்வதற்கு அனுமதிக்கின்றன.

தன்னிச்சையான கைதுகள் விடயத்தில் ஒரே மாதிரியான சட்டரீதியான சரத்துகள் இல்லை. இவ்விடயத்தில் சாதாரணமான சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலவிதிகள் ஆகியன இயங்குகின்றன. இச்சட்டங்களின் கீழ் எந்தவொரு பொலீஸ்காரரும், உயர்தர பொலீஸ்காரரும், முப்படைகளில் எதனையும் சேர்ந்த அங்கத்தவர்களை கைது செய்யலாம்.

தடுத்து வைத்தலிலும் சட்டத்தில் சமநிலை இல்லை. சாதாரண சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தல் இயலாது.

பயங்கரவாத தடைச்சட்டம்

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் உயர்தர பொலீஸ் அதிகாரியால் விடுக்கப்படும் தடுப்புக்காவல் உத்தரவு பாதுகாப்பு அமைச்சரால் விஸ்தரிக்கப்படலாம்,

அவசர கால நிலைமைகளின் கீழ், வடக்கு - கிழக்கு பகுதியில்மேற்கொள்ளப்படும் கைதுகளுக்கும் கொழும்பில் மெற்கொள்ளப்படும் கைதுகளுக்கும் வித்தியாசம் உண்டு.

வடக்கு - கிழக்கில் உயர்தர பொலீஸ் அதிகாரி அல்லது ராணுவ அதிகாரி தடுப்புக் காவல் உத்தரவை வழங்கலாம். ஆனால் அந்தக் காலப் பகுதியை விஸ்தரிக்கும் உத்தரவைப் பெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சு செயலாளரிடம் செல்ல வேண்டும்.

கொழும்பைப் பொறுத்தவரை உயர்தர பொலீஸ் அதிகாரி, தடுப்புக்காவல் உத்தரவை விடுக்கலாம். இது பாதுகாப்பு அமைச்சு செயலாளரால் விஸ்தரிக்கப்படலாம்.

சித்திரவதை

தடுப்புக்காவல் நேரத்தில் அநாதரவான தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர். அவர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பலவந்தமாகப் பெறப்படுகிறது. அல்லது "உற்பத்தி" செய்யப்படுகிறது. இத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் ஆராயப்பட்டு நிராகரிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் பாராமெடிக்கல் மாணவியான ஒரு ஷாந்தி குமாரசாமி, ரஜனி வேலாயுதபிள்ளை, தேனுகா செல்வராஜா பலரால் கற்பழிக்கப்பட்டதும் அதில் முதல் இரண்டு பிள்ளைகள் கொலைசெய்யப்பட்டதும் சர்வதேச எதிர்ப்பை உருவாக்கின.

தமிழர்கள் தன்னிச்சையின்றிக் காணாமற் போவது வடக்கு கிழக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் இடம்பெற்றுள்ளது. குமாரபுரம் மாவட்டத்தில் 26 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள், பொல்கொட வாவியிலும், தியவன்ன ஓயாவிலும் 21 தமிழர்களின் சடலங்கள் ஆற்றில் மிதக்கக் காணப்பட்டன.

வவுனியா நகரில் இரு தமிழர்களின் சடலங்கள் வீதியோரத்தில் கிடக்கக் காணப்பட்டன. கடந்த வாரம் இரு தமிழ் பெண்களின் சடலங்கள் வவுனியாவில் வீதியோரத்தில் கிடந்தன. திருகோணமலையில் சிறையுடைப்பு நடந்த போது சிறையில் எஞ்சியிருந்த 5பேர் கடற்கரைக்கு கொண்டு செல்லப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதிர்ச்சி தரும் விடயம்

மனித உரிமைகளை மீறியமைக்குப் பொறுப்பானவர்களை அணுகமுடியாத நிலைமை இலங்கையில் அதிர்ச்சிதரும் ஒன்றாகும்.

குமாரபுரம் சம்பவத்தின் சந்தேகநபர்களான 6 படை வீரர்கள், சடலங்கள் ஆற்றில் மிதந்ததில் சந்தேக நபர்களான விசேட அதிரடிப் படை கமாண்டோக்கள், ஆட்கள் எரிக்கப்பட்டது தொடர்பாக சந்தேகிக்கப்பட்ட 6 பொலீஸ் அதிகாரிகள் ஆகியோர் பிணையில் விடப்பட்டார்கள். அவர்களுக்கு எதிராக இன்னமும் வழக்குத் தொடரப்படவில்லை.

தமிழர்கள் பாதிப்படைந்த பல மனித உரிமை மீறல்கள் பல அமைப்புக்களால் இலங்கையிலும் வெளிநாட்டிலும் கவனமாக வரிசைப்படுத்தப்பட்டு பதியப்பட்டுள்ளன. அதில் ஒன்று மனித உரிமைகளுக்கான தமிழ் நிலையத்தால் இந்த அமர்வில் கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழர்களின் மரபு வழித் தாயகத்தில் "அந்திய இலங்கை இராணுவம்" கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதால் இந்த மனித உரிமை மீறல்கள் ஏற்பட்டுள்ளன. நான் ஏன் இதனை 'அந்நியம்' எனக் குறிப்பிடுகிறேன் என்றால் 99% சிங்களவர்களைக் கொண்ட இலங்கை இராணுவத்தினர் தமிழ் பேசத் தெரியாதவர்கள், அறியாதவர்கள் தமிழர்களின் கலாசாரம், மதத்தைப் பற்றி அக்கறை இல்லாதவர்கள் இவர்கள். அங்கு தொடர்ந்தும் இருப்பதனால் மனித உரிமை மீறல்கள் மேலும் அதிகரிப்பதுடன் பேச்சுவார்த்தை ரீதியான அரசியல் தீர்வுக்கும் தடையாகும்.

எனவே தமிழர்களின் துயர நிலை குறித்து சர்வதேச சமூகம் உடனடியாக கவனஞ் செலுத்த வேண்டும், ஆகவே தன்னிச்சையான தடுத்து வைத்தல் சம்பந்தமான காரியக்குழு மற்றும் சித்திரவதை குறித்த விசேட அதிகாரி ஆகியோர் உடனடியாக இலங்கைக்குச் சென்று அங்குள்ள மனித உரிமைகள் நிலை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

கண்ணாடி சேர்ந்த பெரிய அலுமாரி விற்பனைக்குண்டு. தொடர்பு;- அ. ஜெயராஜா இல. 10, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (46174)

ஒரு மாதம் நிரம்பிய இரண்டு மறி ஆட்டுக் குட்டிகளுடன் கூடிய யமுனாபாறி ஆடு, வீட்டுவ் சீற், வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நாகேந்திரன், நேசவாசா, புத்தூர்ச் சந்தி, மீசாலை, (46218)

காவேரி

காவேரி சீயாக்காய்ப் பவுடர் இயற்கை நமக்கு அளித்த ஒப்பற்ற மூலிகையான கருசலாங்கண்ணி உட்பட ஏழு (7) வகையான இயற்கைப் பொருள்கள் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இப்பொழுது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். தயாரிப்பாளர் கந்தசாமி அன்சன்ஸ், ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி. (46201)

காவேரி மிளகாய்த் தூள் விற்பனையாளருக்கும், பாவனையாளருக்கும் அறியத் தருவது மிளகாய்த்தூள் தயாரிப்புக்குரிய மூலப் பொருள்கள் விலை உயர்வால் காவேரி மிளகாய்த் தூளுக்கு 1 கிலோவுக்கு ரூபா 10/- விலை உயர்த்தியுள்ளோம். தயாரிப்பாளர் கந்தசாமி அன்சன்ஸ், ஆடிய பாதம் வீதி, நல்லூர். (46200)

தவறிவிட்டது

நாகராசா சாந்தகுமார் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 590761796V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். 'வித்தியா நகையகம்' 177 B கஸ்தூரியார் வீதியில், ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். டச்றோட், மானிப்பாய். [9476]

நூலகம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள்: லிங்க் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, சாவகச்சேரி. (45932)

கடை வாடகைக்கு

ஆடியபாதம் றோட்டில் திருநெல்வேலி சந்தைக்கு முன்னால் இரண்டு அறையுள்ள கடையாக பாவிக்கக் கூடிய கட்டடம், வாடகைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். லீலாவதி நடராஜா, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு. (9477)

குத்தரிசி தட்டுப்பாடு

யாழ். வர்த்தகத் தினைக்களத்தின் நல்லூரிலுள்ள விற்பனை நிலையத்தில் குத்தரிசி, உள்ளிப்பூடு, லக்ஸ்பிறே பால் மா ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. (ஐ-135)

YARL HALL
கல்வி நிலையம்
93A, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

7-04-97 திங்கட்கிழமை பி.ப. 3 மணிமுதல் சகல வகுப்புக்களும் வழமை போல் நடைபெறும்.

- நிர்வாகி

(46213)

வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் (பிரிவு 268) இன் பிரகாரமான

அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகவே, கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கும் பிரதேசசபையிலிருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர் பிரதேசசபையின் விசேட ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமைப் பணிமனையிலும் நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

திருமதி கமலாதேவி சிவசிதம்பரம்,
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேசசபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி. (சி/447)

31ஆம் நாள் நினைவு அஞ்சலி

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியரும், சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன் தலைவருமான

திரு. பொ. தங்கராசா

அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி சின்னம்மா பொன்னுத்துரை

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்.

(9475)

நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
நாகலிங்கம் கனகரத்தினம் (S.K.)
(இளைப்பாறிய உட்துறைக் கணக்காய்வாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம்)

தோற்றம்: 02 11—1927 மறைவு: 08—03—1997

எங்கள் அன்புத் தந்தையின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியும் எமது துக்கத்தில் கலந்து எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (07-04-97) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.
சகோதரன்: பண்டிதர் நா. கணபதிப்பிள்ளை

"மிதிலை",
சண்டிலிப்பாய். (9479)

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிஷேக தினம்

ஸ்ரீ ஆலய கும்பாபிஷேக தினம் நாளை 08-04-97 செவ்வாய்க்கிழமை நடைபெறும். அன்று காலை முருகப்பெருமானுக்கு விஷேட சங்காபிஷேகமும், சுவாமி வீதி உலாவும் நடைபெறும். சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆலயத்துக்கு வரும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

திரு. வே. முருகேசுச்சுவாமி
அவர்களின் அன்பர்கள்.

(சி/444)

கல்வித்திணைக்களம், யாழ். வலயம் - 02 முழுநேர ஆங்கில வகுப்பு

கல்வித்திணைக்களம் யாழ். வலயம் 02 முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்படும் 1000 மணித்தியாலங்களுக்கான பாடப்பரப்பை உள்ளடக்கிய முழுநேர ஆங்கில வகுப்பு 1997 மே மாதம் தொடங்கி 1997 டிசெம்பர் வரையான காலப்பகுதிகளில் நடைபெற உள்ளது. இவற்றுக்கான பயிற்சி நிலையங்கள் யா/இராமநாதன் கல்லூரி, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிகளில் இடம் பெறும். இப்பயிற்சியை மேற்கொள்வோர் செலுத்த வேண்டிய மாதாந்தக் கட்டணங்கள், மற்றும் கற்கை நெறி சார்ந்த மேலதிக விவரங்களை வலயம் 02 கல்விப்பணிமனையிலும், ஏனைய கல்விக்கோட்டங்களிலும், உயர்தர வகுப்பைக் கற்பிக்கும் பாடசாலைகளிலும் அறிந்து கொள்ள முடியும்.

பயிற்சி பெற விரும்புபவர்கள் இவ்வருடத்துக்குரிய சகல வேலை நாள்களிலும் காலை 9-00 மணியில் இருந்து பிற்பகல் 3-30 மணிவரை வகுப்புக்களில் கலந்து கொள்பவராகவும்,

க.பொ.த. (உ/த)இல் 3 பாடங்களில் சித்தி அடைந்தவராகவும்

க. பொ. த. (சா/த) இல் ஆங்கிலப் பாசையில் "சி" தரம் பெற்றவராகவும்.

அல்லது

க. பொ. த. (சா/த) இல் ஆங்கில பாசை இரண்டிலும் "சி" தரம் பெற்று க. பொ. த (சா/த) சித்தி அடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிவரம் அடங்கிய விண்ணப்பம் ஒன்றைத் தயார் செய்து சுயவிலாசமிடப்பட்ட ரூபா 2-50 முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடித உறை உள்ளடங்கலாக கல்வித்திணைக்களம் யாழ். வலயம் 02, இருபாலை, கோப்பாய் எனும் முகவரிக்கு 30 - 04 - 1997 இக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கல்விப்பணிப்பாளர்,
யாழ். வலயம் 02
இருபாலை, கோப்பாய்.

(46204)

31 ஆம் நாள் கண்ணீர் நினைவஞ்சலி



தோற்றம்: 21 — 03 — 1928

மறைவு: 08 — 03 — 1997

அமரர்
தேவசகாயம் அல்பிறட் யோசப்
(இளைப்பாறிய தபால் அதிபர்)

நிதி: 7 - 4 - 97

அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய்,
பண்பின் உறைவிடமாய்
தந்தைக்கு எடுத்துக்காட்டாய், இருந்து
திடீரென எம்மை ஆறாத்துயரில்
மூழ்க வைத்து மீளாத்துயில கொண்ட
எம் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

08 — 04 — 97 அன்று மாலை **5. 30** மணிக்கு அவரின் ஆத்மசாந்தி அடைய பங்குத்தந்தை இம்மனுவேல் அடிகளால் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

4ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை. (9478)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

கூட்டுறவுப் பொருளாதாரம்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சமூகத்துக்கு எந்த வகையில் உதவலாம் என்பது குறித்து, யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் சிறந்த ஆலோசனை வழங்கியுள்ளார்.

அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி தமது பகுதிகளைத் தொழிற்பேட்டைகளாக மாற்றும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு உண்டு என்றும் அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கூட்டுறவுத்துறை ஒரு காலத்தில் மிகப் பெரியளவில் வளர்ச்சி அடைந்திருந்தது. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு முன்மாதிரியாகவும் விளங்கியது.

உணவுப் பொருள்களுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்ட போது, பங்கீட்டு முறையில் அவை விநியோகிக்கப்பட்ட காலத்தில் 'கூப்பன் கடைகள்' உருவாக்கப்பட்டன. பின்னர் அவை கூட்டுறவுப் பண்ட சாலைகள் ஆகின. அந்தக் கூட்டுறவுப் பண்டசாலைகளை நிர்வகிக்க கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

மக்கள்எல்லோரும்சேர்ந்து கூட்டு அடிப்படையில் சங்கங்களை நிறுவித் தமது தேவைகளை நிறைவேற்றும் முறை வெறும் உணவுப் பங்கீட்டுக்கு மட்டுமன்றி விவசாயம், கைத்தொழில், மருத்துவம் ஆகிய துறைகளுக்கும் பரவியது. அதனால் யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுத்துறைமேலோங்கி வளர்ந்தது. கூட்டுறவு வங்கி ஒன்றை நடத்துமளவுக்கு இப்பகுதியில் கூட்டுறவு முயற்சிகள் தடங்கல்கள், தடைகள் இன்றிச் சிறப்புற்றன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவான பின்னர் அவற்றின் பணிப்படிப்பு விசாலமடைந்தது; பல துறைகளுக்கும் பரவியது; அந்தந்தப் பகுதியின் பொருளாதார, சமூக மேம்பாட்டுக்கு பெரிதும் உதவின.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னரும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மின்னெசவாலைகளையும், பெரிய அளவிலான வெதுப்பகங்களையும், விவசாயப் பண்ணைகளையும், வைத்திய சாலைகளையும் நடத்தியதை மறந்து விடுவதற்கில்லை.

ஆனால் இப்போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வெறுமனே பங்கீட்டுப் பொருள்களை விநியோகிக்கும் நிலையங்களாகவும், ஆகக் கூடியது வியாபார நிலையங்களாகவுமே இயங்குகின்றன.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும். பழைய நிலைக்குக் கூட்டுறவுத்துறையை உயர்த்த வேண்டும். தன்கையே தனக்கு உதவி என்பதனை மறந்துவிடலாகாது. அந்தந்தப் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் திட்டமிட்டு விவசாய, கைத்தொழில், மீன்பிடி மற்றும் பல துறைகளில் புதிய முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும்.

இதற்கான நிதி மற்றும் கடனுதவிகளை அரசாங்கம் வழங்க முன்வர வேண்டும். அதற்குப் பின்னடித்தால் தமிழர் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் அக்கறை உண்டு என்று கூறுவது வெறும் வார்த்தை ஜாலமாகவே இருக்கும்.

வீரவில தடுப்புமுகாமில் இருந்து 62 பேர் விடுதலை செய்யப்பட்டனர்

அவர்களை டக்ளஸ் பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், ஏப். 7

வீரவில புனர் வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்தவர்களில் 62 பேர் முதற் கட்டமாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் வீரவில புனர் வாழ்வு முகாமில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட எம். பியும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா விடுதலையான 62 பேரையும் பெறுப்பேற்றுள்ளார் என்று ஈ. பி. டி. பி. யின் யாழ். அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

இவர்களை வீரவிலவில் இருந்து திருகோணமலைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப அந்த அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

விடுதலை செய்யப்பட்டவர்களுக்குத் தேவையான பொருள்கள் மற்றும் உதவிகளையும் அந்த அமைப்பு வழங்கியுள்ளது.

(ஐ-3)

கடந்த மாதம் கைதான 13 பேர் குறித்து கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ். மாவட்டத்தில் கடந்த மாதத்தில் படையினரால் கைது செய்யப்பட்ட 13 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை ஈ.பி.டி.பி. யாழ். அலுவலகத்தினர் 51 ஆவது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலேகல்லவிடம்சமர்ப்பித்துள்ளனர்.

இவர்களில் ஈ. எல். அஞ்சலோ (உயரப்புலம்), சிவராசா சிவநந்தகுமாரன் (ஆனைக்கோட்டை) ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் —

கனகரத்தினம் நகுலேஸ்வரன் (காளிகோயிலடி, கொக்குவில்), நடராசா கணேசலிங்கம் (மானிப்பாய் வடக்கு), தங்கராசாரஞ்சித்குமார் (நவாலி) ஆகியோர் காங்கேசன்துறை பொலீஸ் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனரென்றும் — பலேகல்ல ஈ. பி. டி. பி. அமைப்புக்கு அறிவித்துள்ளார்.

(இ-3)

பனம்பொருளில் போஷாக்கு உணவு தயாரித்து வழங்கத் திட்டம்

திருநெல்வேலி, ஏப். 7

வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் மக்களிடையே ஏற்பட்டு வரும் போஷாக்கு உணவுப் பற்றாக்குறையை நீக்குவதற்காகப் பனம் பொருளில் இருந்து போஷாக்கு உணவைத் தயாரித்து விநியோகிக்கும் திட்டம் ஒன்றை விரைவில் செயற்படுத்தவுள்ளது.

கொழும்பிலிருந்து சுகாதார திணைக்களத்துக்கு அனுப்பப்படும் 'திரிபோஷா' மாவின் தரத்துக்கு இணையான தரத்தை இந்த போஷாக்கு மா கொண்டிருக்கும் என்றும், உள்ளூரில் கிடைக்கும் உணவு மூலப் பொருள்களை கொண்டு இது தயாரிக்கப்படும் என்றும்தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் திணைக்களம் கிராமங்கள் தோறும் நடத்தி வரும் தாய், சேய் நல சிகிச்சை நிலையங்கள் மூலம் போஷாக்கு குறைந்த கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் ஆகியோருக்கு இதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு வலிகாம மக்களின் இடம்பெயர்வின் போது இடம்பெயர்ந்த மக்களுக்கு 2000 கிலோ நிறையுள்ள போஷாக்கு உணவு வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி மன்றத்தினரால் தயாரித்து வழங்கப்பட்டது.

தற்போது இந்த மன்றம் பருத்தித்துறையிலுள்ள சத்துணவு மையத்தில் ஒடியல் கூழ் உட்பட பல்வேறு வகைப் பட்ட பனம் பொருளிலான உணவுப் பதார்த்தங்களைத் தயாரித்து சகாய விலையில் வழங்கி வருவதும் குறிப்பிடத் தக்கது.

(ஐ-135)

பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரியை புனரமைக்குமாறு கோரிக்கை

திருநெல்வேலி, ஏப். 7

யுத்த கால அனர்த்தங்களின் போது முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்ட நிலையிலுள்ள பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1992ஆம் ஆண்டுக்கு முற்பட்டகாலத்தில் இவ்வைத்தியசாலை பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, வடலியடைப்பு, பெரியவிளான், இளவாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு சிறந்த வைத்திய சேவைகளை ஆற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

யாழ். முனியப்பர் கோயிலுக்கு சென்று வழிபட விரைவில் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ். முனியப்பர் ஆலயத்துக்கு விரைவில் பொதுமக்கள் சென்று வழிபட அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடாக முனியப்பர் ஆலயப்பகுதியில் கண்ணிவெடிகள், பொறி வெடிகள் ஆகியவற்றை சோதனை செய்து விரைவில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். அலுவலகத்தினர் ஆலயப்பகுதியை நேற்று முன்தினம் பார்வையிட்டு, அப்பகுதியை சுத்திகரிப்பது தொடர்பாக ஆராய்ந்தனர்.

யாழ். மாவட்ட எம்.பியான டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ள நிதியில் இருந்து இந்த ஆலயம் புனரமைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

யாழ். மத்திய கல்லூரி மைதானம் விரைவில் புனரமைக்கப்படும்

திருநெல்வேலி, ஏப். 7

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

நவீன வசதிகள் கொண்ட சிறந்த மைதானமாக அதனை மாற்றி அமைத்திடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மத்தியகல்லூரி அதிபர் க. இராஜதுரை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலாவுடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான முயற்சிகளை எடுத்துள்ளார்.

மாகாணக்கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுகளிடம் இருந்து இதற்கெனப் பல லட்சம் ரூபா பணம் பெறப்படவுள்ளது.

இந்த விளையாட்டு மைதானத்தை யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை விருத்தி நிலையமாகப் பராமரித்தும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஐ-135)

போலி எண்ணெய் தயாரிப்பு மோசடி ஒன்று கண்டுபிடிப்பு

பெருமளவு 'லேபல்' களும் சிக்கின

திருநெல்வேலி, ஏப். 7

கொழும்பில் இயங்கும் சில பிரபல நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்களின் 'லேபல்' களை இங்கு தயாரித்து அவற்றை போலிபாகத் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு ஒட்டும் மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ் உணவு, மருந்து பரிசோதகர் திடீர் பரிசோதனையின் போது இதனைக் கண்டுபிடித்தார்.

பாவனையாளர்கள் தெரிவித்த முறைப்பாடுகளை அடுத்து, யாழ். நகரில் போலி எண்ணெய் தயாரிக்கும் இடங்கள் சிலவற்றில் யாழ் மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் சோதனை நடத்திய போதே இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

அச்சிடப்பட்ட லேபல்கள் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

தலைக்கு வைக்கும் சந்தனாதித் தைல எண்ணெய், நேத்திராலோக எண்ணெய் 'கிங்கோகனற்' எண்ணெய் ஆகியவற்றின் 'ஒறிஜினல்' லேபல்களைப் போன்ற பல லேபல்களும் இவற்றில் காணப்பட்டன.

போலி எண்ணெய் வகைகளைத் தயாரித்து கொழும் பிலிருந்து வரும் எண்ணெய்களின் வியாபார லேபல்களை அவற்றில் ஒட்டி விற்பனை செய்து வருவது இதன் மூலம்தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மேற்கண்ட எண்ணெய் வகைகள் உட்பட எந்த வகையான பொருள்களை தயாரிப்பதாக இருந்தாலும் அதன் லேபலில் உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர், உற்பத்தி செய்த திகதி என்பன பொறிக்கப் பட்டிருக்க வேண்டும் என்றும்—

தர நிர்ணயம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும்—

இப்படி இல்லாத பட்சத்தில் ஒப்பனை சாதனங்கள்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ் மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன் தெரிவித்தார். (இ-135)

அமெரிக்கா-இலங்கை இணைந்து ஹவாயில் இராணுவக் கருத்தரங்கு

37 நாடுகள் கலந்து கொள்கின்றன

அமெரிக்காவும், இலங்கையும் இணைந்து ஒழுங்கு செய்துள்ள உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் கருத்தரங்கு ஒன்று நேற்று ஹவாயில் ஆரம்பமாகியுள்ளது.

ஆசியா, பசுபிக், இந்து சமுத்திரத்தை அண்டிய 37 நாடுகளின் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் பங்குபற்றும் இக்கருத்தரங்கு எதிர்வரும் 12ஆம் திகதி வரை நடைபெறும்.

"21ஆம் நூற்றாண்டுபயிற்சிப்படைகள்" என்ற தலைப்பில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் இலங்கை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த, அமெரிக்கஇராணுவதலைமை நிர்வாக அதிகாரி ஜெனரல் டீமர் ஆகியோர் மட்டும் உரையாற்றவிருக்கிறார்கள்.

இக்கருத்தரங்கில் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், கம்போடியா, புறூணி, கனடா, சீனா, பிரான்ஸ், இந்தியா, ஜப்பான், கொரியா, கஸகஸ்தான், பாகிஸ்தான், பிரிட்டன், ரஷ்யா, இந்தியா, அமெரிக்கா, இலங்கை உட்பட 37 நாடுகள் பங்கு பற்றுகின்றன.

இக்கருத்தரங்கில்பங்குபற்ற அநுருத்த ரத்வத்தை தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சென்றுள்ள இலங்கைக் குழுவில் மேஜர் ஜெனரல் ஒருவரும், பிரிகேடியர்கள் மூவரும், லெப்டினண்ட் கேணல் ஒருவரும் இடம்பெற்றுள்ளனர்.

(இ-3-150)

நாளை

பங்குனி 26

செவ்வாய்க்கிழமை

திதி: பிரதமை பிற்பகல் 3.16வரை.

நட்சத்திரம்: அச்சுவினி பின்இரவு 2.32 வரை.

சுபநேரம்: 10.07-12.37

ராகுகாலம்: 03 07-04.37

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

விளையாட்டு

புலோலி மேற்கு, புலோலி மத்தி ஆகிய இரு கிராம சேவகர்கள் பிரிவும் இணைந்து புதுவருட விளையாட்டு விழாவை நடத்தவுள்ளன. இவ் விழா மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் புத்தாண்டு அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (118)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலுக்கு முன் புலிகளை பொக்ஸ் சந்திக்கலாம்

கொழும்பு, ஏப். 7

எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் தேர்தலுக்கு முன்னர் பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி பேச்சுக்கு அவர்களைக் கொண்டு வர ஏற்பாடுகள் செய்வார் என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் தகவல் வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் லோறன்ஸ் திலகர், கரிகாலன், அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் தற்போது தென் ஆபிக்காவில் தங்கியுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸுக்கும் இடையில் தென் ஆபிரிக்கா அல்லது பிரிட்டனில் பேச்சுக்கள் நடக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தலைவர்கள் வெளிநாட்டில் தற்சமயம் தங்கியிருப்பது, புலிகளுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையே காட்டுகிறது என்று சுட்டிக் காட்டப்பட்டது.

'இன்ரர் நஷனல் அலேட்' அமைப்பின் பொதுச்செயலாளர் குமார் ரூபசிங்கவே இப்பேச்சுக்களின் பின்னணியில் இருப்பதாக ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

அதே சமயம் தென் ஆபிரிக்கா சென்றிருந்த நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் இன்று கொழும்பு திரும்புகிறார். (இ-150-3)

ஆதரவு

புதுடில்லி, ஏப். 7

தற்போதைய அரசியல் நெருக்கடியில் காங்கிரஸ் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைப்பதை விட தேர்தலைச் சந்திக்கவே ஐக்கிய முன்னணி விரும்புவதாக பிரதமர் தேவ கௌடா தெரிவித்துள்ளார்

அதேசமயம் பிரதமர் தேவ கௌடா இராஜினாமாசெய்ய வேண்டும் என்ற காங்கிரஸின் கோரிக்கையை ஐக்கிய முன்னணி நிராகரித்துள்ளது. (ஐ-10)

அமெரிக்காவிலிருந்து கண்காணிப்பு விமானம்

கொழும்பு, ஏப். 7

மறு சீரமைக்கப்பட்ட நான்கு கண்காணிப்பு விமானங்களை அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்ய அரசாங்கம் 'ஓடர்' அனுப்பியுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விமானக் கொள்வனவு தொடர்பான பேச்சுக்களை நடத்த விமானப் படையின் உயர்மட்டக் குழு ஒன்று வாஷிங்டனுக்கு சென்றுள்ளது.

இதேவேளை — விமானப் படை ஆறு எம். ஐ. 24 ரக தாக்குதல் ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்ய உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3 150)

புலிகளுக்கு வரும் ஆயுதங்களை தடுப்பதில் கடற்படை தீவிரம்

கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7

'கடல்வழியாக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வருவதை தடுப்பதில் கடற்படை அதிக கவனம் செலுத்த உள்ளது''

கடற் படைத் தளபதி சிசில் திசேரா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடற் புலிகளில் சுமார் 2 ஆயிரம் பேரே உள்ளனர்.

21 ஆம் நூற்றாண்டை எதிர் நோக்கும் வகையில் கடற்படை நவீன கப்பல்கள் மற்றும் ஆயுதங்களுடன் தயாராகி வருகிறது.

கடல் வழிபாக புலிகளுக்கு ஆயுதங்கள் வருவதைத் தடுப்பதில் கடற்படை தீவிர கவனம் செலுத்த உள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

பாரதீய ஜனதா கட்சி கூடியது

புதுடில்லி, ஏப்.7

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையை அடுத்து நிலைமையை ஆராய்ந்து தனது அணுகுமுறை குறித்து முடிவு எடுக்க பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு நேற்று புதுடில்லியில் கூட்டப்பட விருந்தது. (ஐ)

உடன்பாடு பற்றி ஸ்ரீமாவோவுக்கு அறிவிக்கப்படவில்லையாம்!

இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துக்கும், ஐ. தே. கவுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டது குறித்து பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவுக்கு அறிவிக்கப்படவில்லையாம்.

இத்தகவலை கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' வெளியிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிகாமரிடம் செய்தியாளர்கள் இது குறித்து கேட்டசமயம், பிரதமருக்கு தெரியுமா? தெரியாதா? என்பது குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது என்று அவர் பதில் அளித்தாராம். (இ-3-150)

மேற்கு நாடு...

(முதலாம் பக்கத் தொடர்)

விமானப்படைக்கு ஆண்களையும், பெண்களையும் புலிகள் சேர்த்துள்ளனர். அவர்களுக்கு வன்னிக் காடுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இலங்கை விமானப் படையினரின் சீருடை போன்றதே அவர்களின் சீருடையும் ஆகும்.

தெரிவு செய்யப்பட்டசிலர் மேற்கு நாடுகளில் பயிற்சி பெறுவதாகவும் கூறப்படுகிறது.

இலங்கை விமானப்படையிலும் பார்க்க நவீன விமானங்களை வாங்க புலிகள்கண் வைத்துள்ளனர் என நம்பப் படுகிறது.

வானவெளியில் புலிகள் நடத்த எடுத்துள்ள முயற்சியைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறியுள்ளார். (இ 3-150)

பிரதமராகும்..

(முதலாம் பக்கத் தொடர்)

அனுருத்த ரத்வத்த அடுத்த பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கலாம்.

இப்போது ராஜதந்திர ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வாய்ப்பு உள்ளதால் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கே பிரதமராகும் வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலையில் உடல் நலம் குன்றி இருப்பது தெரிந்ததே (இ-3-150)

தேவைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

வேறு ஒரு நாட்டுடன் சண்டைபிடிக்கும் போது தான் இவ்வளவு ஷெல்களும் தேவைப்படும் என்றும்—

கடற்படையினர் இந்த ஷெல்களில் 20 சத வீதத்தை மட்டுமே 5 வருட காலத்தில் பாவிக்க முடியும் என்றும் 5வருடத்தின் பின்னர் எஞ்சும் 80 சதவீத ஷெல்களையும் கடலில்தான் வீசவேண்டிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொள்வனவு முன்னாள் கடற்படைத் தளபதி காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தற்போதைய தளபதிஇந்த ஷெல்களை கப்பலில் இருந்து இறக்காமல் சீனாவுக்கு திருப்பி அனுப்ப முயற்சி எடுத்தார்.

இந்த விடயம் சீன — இலங்கை நட்புறவை பாதிக்கும் என்பதால் அவற்றை கப்பலில் இருந்து இறக்கி கொழும்புத் துறைமுக களஞ்சியத்தில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கடற்படைக்கு ஆர். பி. ஜி. ஷெல்கள் வாங்கியதிலும இவ்வாறு முறைகேடுகள் இடம்பெற்றதாகவும் செய்திகள் வெளியாகி இருந்தன. (இ-150-3)

வலிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்)

டது.

கொக்குவில், தாவடி, இணுவில், சுன்னாகம், மருதனார்மடம், உடுவில் பகுதிகளை உள்ளடக்கியதாக இத்தேடுதல் நடந்தது.

இத்தேடுதல் நடவடிக்கை காரணமாக நகருக்குள் வரும் தட்டாதெரு பாதுகாப்பு அரண் பாதை ஊடான போக்குவரத்து நண்பகல் வரை பாதிக்கப்பட்டிருந்தது. (இ-3)

விடுதலையான...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்களது பெற்றோர் தமது அலுவலகத்துக்கு வந்து அவர்களைப் பெறுப்பேற்குமாறும் — அந்த அமைப்பு கேட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பால் பொறுப்பேற்கப்பட்ட 13 இளைஞர்கள் விவரம் வருமாறு:-

- முருகேசு கார்த்திகேசு (விடத்தற்பளை)
- பரமானந்தம் பரமதாஸ் (தும்பளை கிழக்கு)
- கந்தசாமி ஜெயபாஸ்கரன் (நாவலடி லேன், மானிப்பாய்)
- கிருஷ்ணன் சிறீகந்தராசா (சரசாலை தெற்கு)
- ஆறுமுகம் நாகேந்திரன் (மிசுருவில் வடக்கு)
- குணரத்தினம் செந்தூரன் (உரும்பிராய் மேற்கு)
- ஜெயராசா உதயராசா (மிருசுவில் வடக்கு)
- செல்வம் ரமணன் (சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி)
- வேலாயுதம் சிறீதரன் (மறவன்புலவு)
- சின்னையா ஜெபக்குமார் (மடத்தடி, சாவகச்சேரி)
- திருச்செல்வம் யோகரத்தினம் (எழுதுமட்டுவாழ்)
- திருச்செல்வம் நாகரத்தினம் (எழுதுமட்டுவாழ்)
- பொன்னையா நந்தகோபாலன் (மீசாலை தெற்கு).

(இ-3)

தினமும்...

(முதலாம் பக்கத் தொடர்

குள் பயணத்தை மேற்கொள்ளவேண்டும். அதன்பின் விண்ணப்பம் ரத்துச் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் கப்பல் சேவை ரத்துச் செய்யப்பட்டால், அது பற்றிய அறிவிப்பு 'உதயன்' பத்திரிகை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய சேவை ஆகியன மூலம் அறிவிக்கப்படும் என்றும் —

யாழ். சிவில் அலுவலக விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

புத்தாண்டில் தரமான
பொருள்கள் மலிவு விலையில்
செல்வம் பென்ஸியில்
★ புத்தாண்டுப் பொங்கலுக்கு பல அளவுகளில் அலுமினியப் பானைகள்.
★ காலத்தின் கவர்ச்சிக்கேற்ப நவீன டிசைன்களில் பாட்டா, ரன்பா, D. S. I. பாதணி வகைகள்.
★ அழகூட்டும் பாடசாலை பேக் (Bag) மற்றும் உபகரணங்கள்.
★ சகலவிதமான ரேடியோ, சுவர் மணிக்கூடுகள்
★ இருபாலாருக்குமான கைக்கடிகாரங்கள்.
★ பிலிம் சுருள், கலட் வகைகள்.
ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
செல்வம் பென்ஸி
இல. 09, நவீன சந்தை, சாவகச்சேரி.

ஈசுர வருடத்தினை
பொலிவுடன் சிறப்பிக்க
வாணி ரெக்ஸின்
வண்ணப் புடைவைகளின் பொலிவுகள்
★ திருமண பட்டுப்புடைவைகள், பட்டுவேட்டிகள்
★ ஜோஜோ, பட்டசில்க், இன்ரகூலர், சுப்பகூலர், பிளேன், பிரின்டட் துணிவகைகள்
★ சிறுவர், சிறுமியர் மனங்கவர் ரெடிமேட் ஆடைகள்
★ இறக்குமதி செய்யப்பட்ட வண்ணமிகு சாறி வகைகள்
(தேவராகம், ரங்கோணி, ஜரீனா, சுபவாகினி)
மற்றும்
இளநங்கையர்களின் இதயம் கவர்
ஸ்கேட் அன் பிளவ்ஸ், கவுண், பஞ்சாபி வகைகள்
ஆடவர்களை அழகுபடுத்தும்
சேட்டிங், சூட்டிங், Tசேட் வகைகள்
அனைத்துக்கும்
வஞ்சிக் குலமகளிர் பஞ்சுநிகர் நெஞ்ச
மதில் பட்டுப்பளபளக்கும்
பட்டாடை உலகம்
வாணி ரெக்ஸ்
இல. 10, நவீன சந்தை — சாவகச்சேரி
(சி/451)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 249/1 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org